வீயெஸ்வி

# டிசம்பர் சீஸன்-2007

*துன்பம் நேர்கையில் யாழெடுத்து நீ*
*இன்பம் சேர்க்க மாட்டாயா எமக்கு*
*இன்பம் சேர்க்க மாட்டாயா*
*அன்பிலா நெஞ்சில் தமிழில்பாடி நீ*
*அல்லல் நீக்க மாட்டாயா கண்ணே*
*அல்லல் நீக்க மாட்டாயா* - **பாரதிதாசன்**

'**பூ**ங்காவில் நடக்கும்போது புல் தடுக்கிக் கீழே விழுந்து காயம்பட்டுக்கொள்பவர்களில் ஆண்கள் எத்தனை சதவிகிதம்? பெண்கள் எத்தனை சதவிகிதம்?'

– இப்படிப்பட்ட விஷயங்களுக்கு மட்டும்தான் இன்னமும் சர்வே எடுக்கவில்லை. மற்றபடி, சகலத்துக்கும் உள்ளங்கையில் சர்வே ரெடி! இவற்றில் சில சர்வேக்கள் சந்தோஷம் தரும்; சில சலசலப்பை ஏற்படுத்தும்; வேறு சில, உயிர்ப்பலி வாங்கும்!

இப்போது சங்கீதத்துக்கும் சர்வே எடுக்கப்பட்டு இருக்கிறது.


சுதா(27%)

IRC and Wide Vision Ltd. கடந்த ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் எடுத்த சர்வேயின் முடிவைப் பார்க்க நேரிட்டது. சீஸன் 2007-ல், இசைக் கலைஞர்களில் 'டாப் 5' இடங்களில் இருப்பவர்களை அடையாளம் காட்டும் சர்வே இது. 600 பேர் வாக்களித்து இருக்கிறார்கள்.

ஆண் பாடகர்களில், சஞ்சய் சுப்ரமணியன் முதலிடத்தில் இருக்கிறார் (28%). இரண்டாவது இடம் டி.எம்.கிருஷ்ணாவுக்கு (22%). மூன்றாவதில் ஜேசுதாஸ் (18%). டி.என்.சேஷகோபாலன் (17%) மற்றும் உன்னிகிருஷ்ணன் (15%) நான்காவது, ஐந்தாவது இடங்களில்!

பாடகிகளில் 27 சதவிகிதத்துடன் சுதா ரகுநாதன் முன்னணியில் இருக்கிறார். இரண்டாவது இடத்தில் பாம்பே ஜெயஸ்ரீ (21%). அருணா சாய்ராமுக்கு மூன்றாவது இடம் (19%). இவர்களுக்குப் பின்னால் நித்யஸ்ரீயும் (18%), ரஞ்சனி காயத்ரியும் (15%).

ஜூனியர்கள் மற்றும் வளரும் கலைஞர்களில் 'டாப் 5' நிலவரம் எப்படி?

ஓ.எஸ்.அருண் 28 சதவிகித வாக்குப் பெற்று முதலாவது இடத்தில்! பாபநாசம் அசோக் ரமணி (24%), சிக்கில் குருசரண் (21%), ஆர்.சூர்யபிரகாஷ் (16%), மாஸ்டர் பாலமுரளி கிருஷ்ணா (11%) என்ற வரிசையில் பட்டியல் முடிகிறது.

பாடகிகளில் காயத்ரி கிரீஷ் வின்னிங் போஸ்ட்டில், 31 சதவிகிதத்துடன்! நிஷா ராஜகோபாலனுக்கும் காயத்ரி வெங்கட்ராகவனுக்கும் நெக் அண்ட் நெக் ரேஸ்! முன்னவர் 24 சதவிகிதமும் பின்னவர் 23 சதவிகிதமும் பெற்றிருக்கிறார்கள். சவிதா நரசிம்மன் 14%, மஹதி 8% என்பது சர்வேயின் முடிவு.

சர்வே முடிவுகள் சரிதான் என்பதை இந்த இருபது கலைஞர்களும் உறுதிப்படுத்துவார்களா அல்லது சர்வேயைப் பொய்யாக்க வேறு யாராவது தொண்டையைக் கனைத்துக்கொண்டு காத்திருக்கிறார்களா?

யாமறியோம்!

டி.வி-க்காரர்கள் யாராவது கச்சேரிகள் முடியும் சமயம் சபா வாசலில் நின்று exit poll நடத்தினால் என்ன?! கணக்கெடுப்பில் சபா கேன்டீன்களைச் சேர்த்துக்கொள்ளக் கூடாது! இல்லாவிட்டால், எல்லா ஓட்டுகளையும் மைசூர்